'REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 1உ. வியாழன் (14—4—55) ★ ★ வெளியூர்: சித்திரை 2உ. வெள்ளி (15—4—55) [இதழ் 259

விவசாயிகளுக்கு அருஞ்சாதனம்

ஓடிக்கொண்டிருக்கும் தண்ணீரிலுள்ள சக்தியைப் பயன்படுத்தி, அதன் மூலமாகவே இயக்கக்கூடிய புதிய ஒரு இயந்திரத்தைக் கண்டுபிடிக்கலாம் என்றும், தென் கன்னட மாவட்டங்களில் காணப்பெறும் பெரும்பான்மை நீரோடை, ஆறுகளிலிருந்து, தேவையான அளவுக்கு தன்னைத்தானே இயக்கிக்கொள்ளும் இத்தகைய தண்ணீர் இயந்திரங்களையும் உருவாக்கலாமென்றும், இவ்வாறு உருவாக்கப்படும் இயந்திரம் ஒன்றின் விலை ரூ. 50-தான் இருக்குமென்றும் கூறப்படுகிறது. வேலை செய்வதற்கென இயக்கு பொருள் எதுவும் தேவைப்படாத இவ்வியந்திரத்தை விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் வினியோகித்து அவர்களுக்கு நன்மை பயக்கும்படி செய்யலாம் என்று, மங்களூரில் அதிகாரிகளடங்கிய கூட்டமொன்றில் ஜி. வி. பாத் என்பவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அம்பேத்கார் எதேச்சாதிகாரத்தின் எதிரொலி

தென் இந்திய பிரிவு அகில இந்திய தொடர்பை அறுத்துக்கொள்ளுமாம்

ஷெட்யூல் வகுப்பு சம்மேளனம் சரிகிறது

டாக்டர் போக்கை சிவராஜ் அவர்களும் சாடுகிறார்

டாக்டர் அம்பேத்கார், பல நூல் கற்ற பெரும் மேதை—ஆராய்ச்சி வல்லுநர்—நெஞ்சுரம் பெற்றவர்! இருந்தால் என்ன? மக்களாட்சி மனப்போக்கும், கூட்டுத் தோழர்களை மதித்து நடந்துகொள்ளும் பெரும்போக்கும் அவரிடம் அறவே கிடையாது என, அவருடன் பல காலம் பழகியவரும், அகில இந்திய ஷெட்யூல் வகுப்பு சம்மேளனத்தின், அதன் தொடக்க முதல் பொதுச்செயலாளராக இருந்து பணி புரிந்துவந்தவருமான ராஜ்போஜ் அவர்கள், மனம் புண்பட்டு அறிவித்துள்ளார். அதற்கான ஆதாரங்களையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

தலைவரின் எதேச்சாதிகாரம், ஒருவர் இருவரை சம்மேளனத்தைவிட்டு வெளியேறச் செய்வதுடன் நின்றுவிடவில்லை; சம்மேளனத்தையே வேகமாகச் சரிய வைத்துவிட்டது. சர்வாதிகாரம்—எதேச்சாதிகாரம்—ஆகியவற்றின் உள்ளடக்கம், குறிப்பிட்ட ஒரு கொள்கைக்குக் கேடு சூழ்வதும், அக்கொள்கையைச் செயலாற்றும் ஒரு நிறுவனத்தைத் தரைமட்டமாக்கச் செய்வதுமேயாகும் என்பது, டாக்டர் அம்பேத்காரின் போக்கால் உறுதி செய்யப்படுகிறது.

தாய்க் கழகமான அ. இ. ஷெ. வ. சம்மேளனத்திலிருந்து, தென்னிந்தியப் பகுதி விலகிக்கொள்ள முன்வந்திருக்கிறது என்ற செய்தி, சம்மேளனத் தலைவர் என். சிவராஜ் அவர்கள், செயற்குழு உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றுக் கடிதத்தில் தரப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

தலைவருக்கு அறிவிக்காமலே, சம்மேளனத்தின் பெயரால், முக்கியமான கோட்பாடுகளில் முடிவு எடுக்கும் செயலை டாக்டர் அம்பேத்கார் மேற்கொண்டு வருவதாக, மேற்படி சுற்றுக் கடிதத்தில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரைக் கலந்து ஆலோசிக்காமலே, கட்சிக்கு ஒரு புது சட்டதிட்டம் உருவாக்கப்பட்டிருப்பதுடன், மற்ற செயற்குழு உறுப்பினர்களுக்கெல்லாம் மேற்படி புதிய ஏற்பாடு டாக்டர் அவர்களாலேயே அனுப்பப்பட்டிருந்தும்கூட, தலைவருக்கு இதுவரை அது அனுப்பப்படாமல் இருப்பது வியப்புக்குரியதாகும் எனவும் அச்சுற்றறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவராக இன்னமும் தாம் இருந்து வரும்பொழுதே, சம்மேளனத் தலைவரெனத் தனது பெயரை சட்டதிட்ட ஏட்டின் முதற்பக்கத்தில் டாக்டர் அம்பேத்கார் பிரசுரித்துக்கொண்டிருப்பதற்கும், அச்சுற்றுக் கடிதத்தில் என். சிவராஜ் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தீட்டிய திட்டம் நிறைவேறுமா?

"இந்திய சர்க்கார், செவிடு, ஊமையர்களின் நலனுக்காக ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது; ஆயினும் அது நிறைவேற்றப்பட பலகாலம் பிடிக்கும்," என்று ஸ்ரீநகருக்கு வந்துள்ள அமெரிக்க மாது ஹெலன் கெல்லர் கூறியிருக்கிறார்.

★★

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்ட அழைப்பு

★

அன்புடையீர்!

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம் 24—4—55 ஞாயிறு காலை 10 மணிக்கு, சென்னை, வண்ணாரப்பேட்டை, தியாகராயர் கல்லூரியில் நடைபெறும்.

அதுபோது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பொதுக் குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகின்றேன்.

பொருள்:—

1. *பொதுச்செயலாளர் தேர்தல்*
2. *மாநில மாநாட்டு வரவேற்புக் குழு அமைத்தல்*

அன்பன்,

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க.

"அறிவகம்" சென்னை
14—4—55

★★

165 ஆண்டுகளாக நிலவி வந்த நிலப் பிரபுத்துவத்திற்குச் சாவுமணி!

புத்தாண்டுப் பிறப்பன்று சர்க்கார் அறிவிப்பு

கல்கத்தா, ஏப். 13—

வங்காள புத்தாண்டுப் பிறப்பையொட்டி, வங்காள சர்க்கார், கடந்த 165 ஆண்டுகளாக நிலவிவந்த நிலப்பிரபுத்துவ முறைக்குச் சாவுமணி அடிக்க இருக்கிறது!

18-ம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில், பிரிட்டிஷ் ஆட்சியின்போது லார்ட் கார்ன்வால் என்பவரால் கொண்டுவரப்பட்ட இந்த ஜமீன்தாரி முறை, 'சர்க்காரால் ஒழிக்கப்பட்டுவிட்டது' என்ற தகவலை, அன்று மாநில முழுமையிலும் நடைபெற இருக்கும் புத்தாண்டு விழாவின்போது செய்தி அறிவிப்பின் மூலம் வெளியிடப்படுமாம்!

சென்ற ஆண்டில், மேற்படி மாநில சர்க்கார், ஜமீன்தாரி முறை ஒழிப்பதற்கு ஒரு சட்டத்தின் மூலம் அதிகாரமும் பெற்று, அவ்வதிகாரத்தின் மூலம் ஜமீன்தாரர்களுக்குச் சொந்தமான நிலங்களையெல்லாம் சர்க்காருக்குச் சொந்தமானதாக்குவதென்று முடிவு கட்டியது நினைவிருக்கலாம். பின்னர், சர்க்கார், அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதை ஓராண்டு காலத்திற்குத் தள்ளிவைத்ததும் தெரிந்ததே. இப்போது அந்தக் காலவரையறை முடிந்துவிடுவதினாலேயேதான், புத்தாண்டின் புது நடவடிக்கையாக இந்தச் செயலில் மே. வங்க சர்க்கார் ஈடுபட்டிருக்கிறது!

நிலத்தையெல்லாம் ஏழைகளுக்கு உடனடியாக வழங்கி தேசீயமயமாக்கப்படாது என்றும், மாநில சட்டசபை பொறுக்குக் குழுவின் பரிசீலனையிலிருந்து வரும் நிலச் சீர்திருத்த மசோதா சட்டசபையில் நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்படும் வரையில் அந்த நிலங்கள் பற்றிய முழுப் பொறுப்பையும் சர்க்காரே கவனிக்கும் என்றும், தற்போது இந்தப் பொறுப்புகளையெல்லாம் மாநில சர்க்கார் நிலவரி அமைச்சர் எஸ். கே. பாசு தலைமையின் கீழ் உள்ள ஒரு குழுவின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதென்றும் அறிவிக்கப்படுகிறது.

போலீசார்மீது புகார் விசாரணை

முதலமைச்சரின் அறிவிப்பு

"தென் திருவாங்கூரிலும், தேவிகுளம் தாலுகாவிலும் அத்துமீறி நடந்ததாகப் போலீசார்மீது கூறப்படும் புகார்கள்மீது 'சுதந்திரத் தோரணை'யில் விசாரணை நடத்தப்படும்," என்று, திரு—கொச்சி சட்டசபையில், முதலமைச்சர் கோவிந்தமேனன் குறிப்பிட்டார்.

அணுசக்தி உற்பத்தி இயந்திரம்

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் இந்தியாவில் வேலை செய்யும்

"சுமார் ரூ. 35 லட்சம் விலையுள்ள அணுசக்தி உற்பத்தி இயந்திரம், அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் இந்தியாவில் வேலை செய்யத் துவங்கும்," என்று டில்லி மேல் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், பிரதமர் நேரு கூறினார்.

கே: இதன் உற்பத்தி சக்தி எவ்வளவாக இருக்கும்?

ப: தெரியாது.

கே: இயந்திரத்தை நிர்மாணிக்கத் தேவையான எல்லாச் சாமான்களும் இந்தியாவில் கிடைக்கின்றனவா?

ப: பெரும்பான்மையான சாமான்கள் இங்கு கிடைக்கவில்லை என்றே தோன்றுகிறது.

கோவில்பட்டியில் ஈ. வெ. கி. சம்பத்

இன ஒலி முழங்க ஊர்வலம்

10—4—55ல், இவ்வூர் இரயில் நிலையத்தில் ஏராளமான தி. மு. கழகத் தோழர்கள் கூடி, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களை வரவேற்றனர். தோழர்கள் சின்னசாமி, எஸ். எம். காசி ஆகியோர் மலர்மாலைகளை அணிவித்தனர். பின்னர் அங்கிருந்து கால் நடையாகவே, தோழர்கள் புடைசூழ, இன ஒலி முழக்கத்துடனும், வாழ்த்தொலிகளோடும் தோழர் சம்பத் அவர்கள் கழகக் கட்டிடத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

அன்று இரவு 7 மணிக்கு, அழகிரி சதுக்கத்தில், தோழர் என். ராமசாமி தலைமையில் பொதுக் கூட்டம் துவங்கியது. அதுபோது நகர தி. மு. கழகம், துறையூர் தி. மு. கழகம், லட்சுமி மில் திராவிட இயக்கத் தொழிலாளர் சார்பில் தோழர் சம்பத் அவர்களுக்குக் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன. கோவில்பட்டி பாண்டியனார் நினைவுப் படிப்பகத்தின் சார்பில், 'நம் நாடு' வளர்ச்சிக்காக 101 காலணாக்கள் அளிக்கப்பட்டது. தோழர் ராசமணி சிறிது நேரம் பேசிய பின், தோழர் சம்பத் அவர்கள் சுமார் இரண்டு மணி நேரம் அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின்னர் சலிங்கன் அவர்கள் சிறிது நேரம் பேசினார். (ந-கி)

இந்தியா முழுமையிலும் 4 கோடி 11 லட்சம் மாடுகள் உள்ளன.

மக்கள் பங்கு

தேசீய விஸ்தரிப்பு வட்டாரங்களில், 1954 டிசம்பர் வரை செலவழிக்கப்பட்ட தொகையில் மக்கள் பங்கு சுமார் 2 71 கோடியாகும்.

கிழக்கு ஜெர்மனியில் களேபரம்!

500-க்கு மேற்பட்ட ஒற்றர்கள் கைது!

பொதுவுடைமையர் தரும் தகவல்!

பேர்லின், ஏப். 13—

பிரிட்டிஷ்—அமெரிக்கா சார்பில், கிழக்கு ஜெர்மனியில் ஒற்றர்களாகப் பணிபுரிந்தனர் எனக் காரணங்காட்டி, 521 நபர்களை கிழக்கு ஜெர்மன் அரசாங்கம் கைது செய்திருக்கிறது.

இவ்வாறு, கைது செய்வதின் மூலம், பயங்கரவாதிகளால் ஏற்படும் பேராபத்துத் தடுக்கப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது.

19 அமெரிக்க ஒலிபெருக்கிச் சாதனங்களும், பரிபாஷை ஏடும், துப்பாக்கிகளும், விஷமும், நிலப்படமும், போலி போக்கு-வரத்து அனுமதிச் சீட்டும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 14—4—'55 வியாழன்

உலக்கைப் பொருளாதாரம்!

புதிதாக அரிசி குத்தும் ஆலைகளைத் துவக்குவதை இனி அனுமதிக்க முடியாது எனச் சென்னை அரசாங்கம் தீர்மானித்து விட்டது. கைக்குத்து அரிசித் தொழிலைப் பெருக்கும் நோக்கத்துடனேயே, இந்த முடிவை மேற்கொண்டதாக அரசாங்கம் விளக்கம் தந்திருக்கிறது.

புதிய அரிசி ஆலைகளைத் துவங்க விடாமல் தடுத்துவிடுவதின் மூலம் கைக்குத்து அரிசித் தொழில் பெருகிவிடுமா என்பது நிச்சயமற்ற ஒன்றுகும்.

அரசாங்கத்தின் கருத்துப்படி, அப்படியே கைக்குத்தல் அரிசித் தொழில் ஆக்கம் பெறுவதாகவே வைத்துக்கொண்டபோதிலும், அது அவசியந்தானு — இக்காலத்திற்கு ஏற்றதுதானு என்பதையும் ஆராய வேண்டும்.

ஆலையில் குத்தித் திட்டப்படும் அரிசியைக் காட்டிலும், கைக்குத்தல் அரிசியில் உடலை வளர்க்கும் உயிர்ப்பு சக்தி கூடி இருப்பதாகவும், எனவே ஆலையில் திட்டப்பட்ட அரிசியை உட்கொள்ளுவதற்குப் பதிலாக கைக்குத்தல் அரிசியை உட்கொள்வதால் ஒருவர் திடகாத்திரமாக வாழ முடியும் என்பதும், கைக்குத்தல் அரிசி ஆதரவாளர்களின் கட்சி. மக்களின் உடல் நலம் வளர்க்கப்படுகிறது என்று கூறும் அளவோடு, மேற்படி ஆதரவாளர்கள் நின்று விடுவதில்லை. தொழில் துறையில் கைக்குத்தல் அரிசிக்கு உயர்ந்த இடம் ஒதுக்கியும் பேசக் கிளம்பிவிடுகின்றனர்.

உழைப்பின் கால அளவைக் குறைத்தும், அதே நேரத்தில் உழைப்பின் மதிப்பைக் கூட்டவும் செய்வதுதான் இயந்திரத்தின் முக்கிய பணியாகும். அதுவுமன்றி, உழைப்பில் உள்ள கடுமையையும் கொடுமையையும் அறவே ஒழித்து, உழைப்பை இலகுவாக்குவதும் இயந்திரத்தின் பெரும் பணியேயாகும்.

மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு வகை நியாயத்தையும் கொண்டு பார்க்குமிடத்து, கைக்குத்தல் அரிசித் தொழிலை ஒரு தொழிலாகக் கொள்ளவும் முடியாது; அந்தத் தொழில் மேலும் ஆக்கம்பெற வேண்டும் என்பதை நியாயமாக விரும்பி வரவேற்பதற்கு பதிலாக, வெட்டி வீழ்த்த வேண்டும் என்றுதான் இரக்கச் சிந்தை கொண்ட ஒவ்வொருவரும் துணிந்து கூறுவர்.

கடுமையாக உழைக்கும் இயல்புடைய மாடு போன்ற பிராணிகள், கடுமையாக உழைப்பதைக் கண்டு, மனம் சகிக்காமல் மாட்டின் உழைப்பைக் கட்டுப்படுத்தச் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. மாட்டினத்தைச் சேர்ந்த ஆவினத்தைக் கொல்லக்கூடாது என, ஜீவகாருண்யம் பேசும் சிலர்கள்தான், மனிதனைக் கடுமையான மிருக உழைப்புக்கு பலியாக்கி, ஒரேயடியாகக் கொல்வதற்கு பதிலாக, தினம் தினம் கொஞ்சம் கொஞ்சமாகச் சித்திரவதை செய்து கொல்ல முன் வருகின்றனர். கைக்குத்தல் அரிசித் தொழிலுக்குக் காட்டப்படும் ஆதரவு மேற்கூறிய அறத்தின் நீங்கிய அதிக்கிரமமேயாகும்.

'அரிசி குத்தும்ஆலைப் பெருக்கத்தால், கைக்குத்தல் அரிசித் தொழில் நசிந்துவிட்டது; அதை உயிர்ப்பித்துப் பெருக்க புதிய ஆலைகளுக்குத் தடை விதிக்கிறோம்' என நியாயவாதம் பேசும் சென்னை அரசாங்கத்தார், கைக்குத்தல் அரிசித் தொழில் வளர ஆலைகளுக்குத் தடை விதிப்பது உண்மையாக இருக்குமானுல், அதே நியாயப்படி, கைநெசவு ஆக்கம் பெறவும், கதர்த் தொழில் பெருகவும், இருக்கும் நெசவாலைகள் அனைத்துக்கும் தடை விதிப்பதுடன், புதிய ஆலைகளைத் துவங்க விடாமலும் இதற்குள்ளாகத் தடுத்திருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள கருத்தில், நாட்டு மக்களின் வேலையின்மை குறையவும், நெசவாளர்கள் நிரந்தரமாக வேலை பெற்று உயிர் வாழவுமான ஒரு நிலை பிறப்பது நிச்சயமாகும். அதுவுமன்றி இயந்திர இரைச்சலினுல் மக்களுக்கு ஏற்படும் சிற்சில நரம்பு வியாதிகளையும் தடுப்பதுடன், மக்களின் சுகவாழ்வையும் உறுதி செய்ய முடியும். இதைச் செயலாற்ற அரசாங்கம் முன் வராது என்பதை நாம் அறிவோம். இது அறிவுடைமை ஆகாது என அரசாங்கம் எள்ளி நகையாடும் என்பதும் நமக்குத் தெரியும்.

மக்கள் அனைவருக்கும் வயிறு உண்ணுவதற்கும போதுமான அரிசி வழங்குவதுதான் ஒரு நாகரீக அரசாங்கத்தின் முதற்கடமையாகும். அந்த முதல் காரியத்தை நிலையாகச் செய்து முடித்துவிட்ட பிறகுதான், வழங்கப்பெறும் அரிசி சத்துள்ளதா இல்லையா என்ற ஆராய்ச்சியில் ஒரு அரசாங்கம் இறங்க வேண்டும். ஆனுல், நெல் உற்பத்திக் கணிசமாகப் பெருகி இருக்கிறது எனக் கூறப்பட்டபோதிலும், முழு வயிறு உண்ணுகிறவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தகுந்த அளவு கூடிவிடவில்லை. நெல் உற்பத்திப் பெருகி இருக்கிறதே அல்லாது, பல நாள் பட்டினி கிடப்பதும், உண்டாலும் கால் வயிறு அரை வயிறு உண்பதும் இன்றும் நாட்டில் நீடித்துத்தான் இருந்து வருகிறது.

அரை வயிறு கால் வயிறு உண்பதால், அப்படி உண்கிற ஏழை மக்கள் திடகாத்திரர்களாக இருக்க முடிவதில்லை. மெலிந்து எலும்பும் தோலுமாகத்தான் பல இலட்சக் கணக்கான மக்கள் இருந்து வருகின்றனர். அவர்களைப் பீடித்திருக்கும் பட்டினி நிலைமை, அகால மரணத்திற்கு அடிப்படையாகவும் இருந்து வருகிறது.

எனவே, மக்களாகப் பிறந்த அனைவரும் வயிறு நிறைய உண்பதற்கு உடனடியாக வழி செய்தாக வேண்டும். அப்படி வழி செய்துவிட்டப் பிறகுதான், ஆலையில் திட்டப்படும் அரிசிக்கு பதிலாக, அரசாங்கம் கூறுகிறப்படி சத்துள்ள கைக்குத்தல் அரிசியாக வழங்கும் ஏற்பாட்டை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

அனைவரும் வயிறு நிறைய உண்ணுவதற்கு முதற்கண் ஏற்பாடு செய்வதைவிட்டுவிட்டு, வயிறு புடைக்கத் தின்னும் சிலருக்கு மட்டும் சத்துள்ள கைக்குத்தல் அரிசியாக விநியோகிக்க தீவிரமாக முன் வருவது முதல் தரமான மோசடியாகும்.

புதிதாக அரிசி குத்தும் ஆலைகளுக்கு அனுமதி மறுப்பதின் மூலம், கைக் குத்தல் அரிசித் தொழிலில் ஈடுபட கிராமத்திலிருக்கும் வேலையற்ற ஆணும் பெண்ணும் முன்வருவர் எனக் காங்கிரஸ் அரசாங்கம் கருதுகிறது. அரசாங்கம் எதிர்பார்ப்பது ஒருநாளும் ஈடேறப்போவது கிடையாது என்பது நிச்சயம். கிராம மக்களைப் பற்றியுள்ள இலகுவாக வாழும் விருப்பும், கைக்குத்தல் அரிசித் தொழிலிலுள்ள கடுமையான உழைப்பை ஏற்றுக் கொள்ளும்படி, அவர்களுக்குத் தூண்டுதல் அளிக்காது. வழக்கம் போல் பட்டினி கிடந்து சாகத் துணிந்தாலும் துணிவரே அல்லாது, மறுபடியும் உலக்கை பிடித்து மாடு போல் உழைக்கவும், நெல் குத்தும் எத்தத்தில் வியர்வை சிந்தப் பாடுபடவும் இனி ஒருக்காலும் கிராமத்தவர் முன்வரப் போவது கிடையாது.

பல ஆண்டுக்கு முன்பே உலக்கையை ஆழக் குழி வெட்டி புதைத்துவிட்டு, இலகுவாக உழைத்து உயிர் வாழும மனப்போக்கு பெற்றுவிட்ட கிராம மக்கள், மீண்டும் கைக்குத்தல் அரிசித் தொழிலுக்குப் புத்துயிர் அளிக்கும் முயற்சியை வரவேற்கப் போவது கிடையாது. எனவே, கைக்குத்தல் அரிசித் தொழில் பெருக்கும் அரசாங்கத்தின் ஏற்பாடு ஏட்டளவோடு இருந்துவிடும் என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்க இடமில்லை.

ஆனுல் புதிய அரிசி ஆலைகளுக்கு அனுமதி மறுப்பினுல், உடனடியாகப் பலன் பெற இருக்கிறவர்கள் பழைய அரிசி ஆலை சொந்தக்காரர்களேயாவர். அதாவது, புதிய ஆலைகளுக்கு அனுமதி கிடையாது என நிச்சயமானவுடன், இது வரை நெல் குத்தி வந்ததற்குப் பெற்றுவந்த கட்டணத்தைக் கண்டிப்பாக, பழைய ஆலைக்காரர்கள் உயர்த்தத்தான் உயர்த்துவர். அதனுல் பாதிக்கப்பட இருக்கிறவர்கள், பொதுவாகப் பொது மக்களேயாவர்.

பழைய ஆலைக்காரர்களின் இலாபத்தைப் பெருக்கும் ஏற்பாடாகத்தான், புதிய அரிசி ஆலைகளுக்குத் தடை விதிக்க அரசாங்கம் முன் வந்திருக்கிறதோ என்றுகூட ஐயுற வேண்டியதாக இருக்கிறது.

உலக்கை காலம் முடிந்து பல ஆண்டுகள் ஆய்விட்டன. இது அணு யுகம். இந்த நேரத்தில் உலக்கைப் பொருளாதாரத்துக்குத் திரும்பிச் செல்ல, சென்னை அரசாங்கம் திருவுளம் கொண்டிருப்பது, திராவிடப் பெருங்குடி மக்களின் துரதிருஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்.

சென்னை அரசாங்கத்தின் உலக்கைப் பொருளாதார

தமிழ் நாட்டுக் கோயில்களில் முடங்கிக்கிடக்கும் முதலீடுகள்!

ரூ. 50 லட்சம் மதிப்புடைய பொருள் சில ஆலயங்களில் மட்டுமே தேங்கிக்கிடக்கிறது!

அரசாங்கம் தரும் புள்ளிவிவரம்

சென்னை, ஏப். 12—

இந்துமத தர்ம பரிபாலன இலாகாவின் 1952 ஏப்ரல் முதல் தேதி முதல், 1953 மார்ச் 31-ந் தேதிவரை உள்ள காலத்தின் நிர்வாக அறிக்கையில், அந்தக் குறிப்பிட்ட காலத்தில் வருமானம் ரூ. 10,29,126—8—4 என்றும், செலவு 11,97,066—1—10 என்றும் கூறப்பட்டுள்ளது.

"வருமானம் வீழ்ந்திருப்பதற்குக் காரணம், மத பரிபாலனச் சட்டம் 76—(1) பிரிவின்படி மத நிறுவனங்களிடமிருந்து பங்குத் தொகை விதிக்கப்பட்டு வசூலிக்கப்படவில்லை; இதற்குக் காரணம், தலைமை உயர் நீதிமன்றம், 'அந்தச் சட்டப் பிரிவு, மாநில சட்டசபைக்குப் புறம்பானது,' என்று தீர்ப்பளித்திருப்பதேயாகும்," என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

"இலாகாவின் அதிகார வரம்பிற்குட்பட்ட பிரதேசத்தில் பெரிய மடங்கள் 218, கோவில்கள் 12,926, குறிப்பிட்ட எண்டோமெண்டுகள் 663 இருக்கின்றன; சிறிய நிறுவனங்கள் 16,295 உள்ளன," என்று அறிக்கை கூறுகிறது.

'இவைகளிலிருந்து வரவேண்டிய ரூ. 4.39 லட்சத்திற்கு ரூ 3.5 லட்சம் வசூலிக்கப்பட்டது,' என்றும் அறிவிக்கப்படுகிறது.

கடந்த 1952 ஜூலை முதல் சுமார் 19 கோவில்களில் உள்ள தொகைகளின் மதிப்பீடு பற்றிய முடிவுகளையும் அந்த அறிக்கை கூறியுள்ளது:

செங்கற்பட்டு மாவட்டம்:— அரங்கநாத சுவாமி கோவில்: திருநீர்மலை— ரூ. 25,260—8—9; கந்தசுவாமி கோவில்: திருப்போரூர்—ரூ. 60,391—4—6; ஆதிகேசவ பெருமாள் கோவில்: ஸ்ரீபெரும்புதூர்—ரூ 8,88,216-14-9; வீரராகவசுவாமி கோவில்: திருவள்ளூர் — ரூ. 6,32,131-15-0; தேவராஜ சுவாமி கோவில்: காஞ்சீபுரம் — ரூ. 10,79,413—3—6.

சென்னை:— சென்ன கேசவ, சென்ன மல்லீஸ்வரர் கோவில்கள்: தேவராஜ முதலி தெரு — தங்க கவசங்கள் — ரூ. 36,558—4—6; பைரகி மடம்—வெங்கடேஸ்வரா கோவில்: ரூ. 1,12,088—8—6.

தென்னாற்காடு மாவட்டம்:—பாடலீஸ்வரர் கோவில்: திருப்பாப்புலியூர்—ரூ. 4,39,159—8—3; சுப்பிரமணிய சுவாமி கோவில்: மைலம் — ரூ. 2,18,478—0—6; விருத்தகிரீஸ்வரர் கோவில்: விருத்தாசலம்—ரூ. 76,547—6—6.

வடஆற்காடு மாவட்டம்:— லட்சுமி நரசிம்ம சுவாமி கோவில்: சோளிங்கபுரம்-ரூ. 1,17,818-10-9

தஞ்சை:— ஆதிகும்பேஸ்வரர் கோவில்: கும்பகோணம் — ரூ. 2,17,87[illegible]-3-6; சுவாமிநாதசாமி கோயில்: சுவாமிமலை — ரூ. 3,72,946—14—3; சீனிவாசப் பெருமாள் கோவில்: நாச்சியார் கோவில்—ரூ 1,47,688—4—0; சந்தானராமசாமி கோவில்; நீடாமங்கலம் — ரூ. 63,214—3—9; சௌரிராஜ பெருமாள் கோவில்: திருக்கண்ணபுரம் — ரூ. 1,77,711—5—3; அவரோகண சுவாமி கோவில்: நாகப்பட்டினம் —ரூ. 1,18,525—6—6; சுப்பிரமணிய சுவாமி கோவில்: எட்டிகுடி — ரூ. 48,934—12—0; வெங்கடாசலபதி கோவில்: உப்பிலியப்பன் கோவில் — ரூ. 1,03,111—3—3.

மேற்படி கோவில்களின் மொத்த சொத்துக்களின்

மதிப்பு ரூ. 49,36,098-10-0

ரூ 10 ஆயிரத்திற்கும் அதிகம் பெறுமான நகைகள், விலையுயர்ந்த பொருள்கள் முதலியன உடைய எல்லாக் கோவில்களிலும் உள்ள சொத்துக்களை மதிப்பிடுவதற்கு இன்னும் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கும் அதிகமாகும் என்றும், அந்த அறிக்கை கூறுகிறது.

டாக்டர் லோகியா எச்சரிக்கப்படுவார்

மதுலிமாயிக்கு ஒரு சோதனை கட்டம்!

புதுடில்லி, ஏப். 13—

கட்சியின் கட்டுப்பாட்டிற்கு எதிராக டாக்டர் ராம் மனேகர் லோகியாவின் தற்போதைய சில நடவடிக்கைகளுக்காக அவரையும், வேறு சில உறுப்பினர்களையும் 'எச்சரிப்பது' என பி. சோ. கட்சியின் தேசிய நிர்வாகக் குழு முடிவு செய்துள்ளதாம்.

கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடக்காததற்காக ஓராண்டு காலத்திற்கு 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டுள்ள மதுலிமாயி, தன் நடத்தைக்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டால், அவரை உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளலாம் எனவும் முடிவு செய்யப்பட்டதாம்.

இடமே கிடையாதாம்!

"சிறிய சொத்துக்காரர்களின் உரிமை-ள் முழு அளவில் பாதுகாக்கப்படும்,"

என்று, பண்டித நேரு, மக்கள் சபையில் நடைபெற்ற அரசியல் சட்ட 4-வது திருத்த மசோதா விவாதத்திற்குப் பதிலளிக்கையில் கூறியுள்ளார்.

அம்மசோதாவுக்கு ஆதரவாக 302 ஓட்டுகள் கிடைத்தன; 5 பேர் மட்டுமே எதிர்த்து வாக்களித்துள்ளனர்.

விவசாய நிலங்கள் உள்பட சர்க்கார் மேற்கொள்ளும் சொத்துக்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படுமென்றும், சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் கேள்விக்கு இடமே கிடையாதென்றும், ஜீவாதார உரிமைகளை இம்மசோதா பாதிக்காதென்றும் உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் உறுதியளித்துள்ளார்.

இளம்பிள்ளை வாத மருந்து

வாஷிங்டன், ஏப். 13—

நோபல் பரிசு பெற்ற டாக்டர் ஜோனஸ் ஸால்க் கண்டுபிடித்துள்ள இளம்பிள்ளைவாத மருந்து (வாக்சின்) மிகவும் சிறந்த பயன் தந்துள்ளதாக மிச்சிகன் பல்கலைக் கழகம் அறிவித்தது.

சென்ற ஆண்டு நாடு முழுவதுமாக சுமார் 20 லட்சம் குழந்தைகளுக்கு பிரயோகித்துப் பார்த்து பலன் கண்டபின், மருந்து வெற்றியடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

சர்க்கார் உத்திரவின் எதிரொலி !

பள்ளிகள் மூடப்படுமா?

அடுத்த ஆண்டில் (1956—57) பள்ளிக்கூடங்களுக்கான மானியத் தொகையை முழுவதுமாக நிறுத்திவிடுவதென பம்பாய் மாநில சர்க்கார் தீர்மானித்துள்ளதின் விளைவாக பம்பாயிலிருக்கும் சுமார் 50 தனிப்பட்டோர் பள்ளி நிறுவனங்களை மூடிவிடவோ, அல்லது பள்ளிக்கான சம்பள விகிதத்தை உயர்த்தவோ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பள அதிகரிப்பினால் பெற்றோர்களின் பொருளாதார நிலைமை பெரும் அளவுக்குப் பாதிக்கப்படும் என்றும் கருத்தறிவிக்கப்படுகிறது.

தனிப்பட்டோர் பள்ளி நிர்வாகிகள், தங்களுக்களிக்கப்படும் மானியங்கள் நிறுத்தப்படுவதினால் பள்ளிகளில் ஏற்படுகின்ற பொருளாதாரச் சிக்கல்களைப் பற்றி மாநில கல்வி இலாகாவிடம் ஒரு மகஜர் தருவதென்று முடிவு கட்டியிருக்கிறார்கள்.

"சர்க்கார் மானியங்கள் தருவதை நிறுத்திக்கொண்டால், அப்பள்ளிகளைப் பற்றிய விஷயத்திலும் சர்க்காரின் மேலதிகாரம் இருக்கக்கூடாது; ஒவ்வொரு பள்ளிக்கும், தனது நிர்வாகத்தை நடத்த பூரண சுதந்திரம் இருக்க வேண்டும்," என்று மேற்படி பள்ளி நிர்வாகிகள் சங்கத் தலைவர் கூறியிருக்கிறார்.

1,66,000 பவுன்மதிப்புள்ள தங்கம் எங்கே ?

விமானம் மூலம் இட்லர் முசோலினிக்கு அனுப்பினாரா?

பிரிட்டிஷ் குழு தேடுகிறது

இத்தாலியின் சர்வாதிகாரியாக இருந்த முசோலினிக்கு, கடந்த 1938-ல். இட்லர் விமானம் மூலம் 1,66,000 பவுன் பெறுமானமுள்ள தங்கக் கட்டிகள் அனுப்பினாராம் ஆனால், அதனை எடுத்துச் சென்ற விமானம் ஆல்ப்ஸ் மலையின் உச்சியில் மோதி விபத்துக்குள்ளாகியதால், அம்மலையின் ஆழமான பள்ளத் தாக்குகளில் அந்தத் தங்கக் கட்டிகள் அனைத்தும் விழுந்து விட்டனவாம்.

தற்போது இந்தத் தங்கம் பூராவையும் தேடிக் கண்டுபிடிக்க 22 வயதுடைய பிரிட்டிஷ் இளைஞரொருவர் 6 பேர் கொண்ட குழுவொன்றுடன் ஆல்ப்ஸ் மலைகளுக்குச் சென்று முயர்சி செய்வாரெனக் கூறப்படுகிறது.

தேசீய சீனாவுக்கு அமெரிக்கா கைவிரிப்பு ?

செஞ்சீனத் தாக்குதலை சியாங் சமாளிக்கக் கூடுமா ?

பார்மோசாத் தீவை சீனா தாக்கினால், அங்கிருக்கும் அமெரிக்கப் படைகள் தாங்கள் தாக்கப்பட்டாலன்றி போரில் கலந்துகொள்ளாதெனவும், சீனாவின் இந்நடவடிக்கை குறித்து, அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவர் நன்றாக ஆராய்ந்து ஒரு முடிவு கூறும் வரையிலும் அமெரிக்கப் படைகள் வாளாவிருக்குமென்றும், குவெமாய், மட்சு ஆகிய தீவுகள் தாக்கப்பட்டாலும், ஐசன்ஹோவர், பிற நாடுகளின் கருத்தையறிந்த பின்னரே முடிவு செய்வார் என்றும் கூறப்படுகிறது.

'சீனாவின் நோக்கம் அபாயத்தை விளைவிக்கக்கூடியது,' என்று திட்டவட்டமாகத் தெரிந்து கொண்டால் மட்டும்தான் சிறிய அணு ஆயுதங்களுடன் அமெரிக்கப் படைகள் போரில் ஈடுபடும் என்றும் கூறப்படுகின்றன.

★

அமெரிக்கத் தலைவர் எச்சரிக்கை ?

சியாங்-கே-ஷேக் கதி என்ன ?

பார்மோசா பகுதியில், செஞ்சீனா தாக்குதல் நடத்தினால், ஆரம்ப காலத்தில் சியாங்-கே-ஷேக்கே அத்தாக்குதலைச் சமாளிக்க வேண்டும் என்று ஐசன்ஹோவர் வற்புறுத்தக் கூடுமாம் !

'பார்மோசாவைப் பாதுகாத்துக் கொள்ளும் அடிப்படை பொறுப்பு தேசிய சீனாவைச் சேர்ந்ததே' என்று சியாங்-கே-ஷேக்கிடம் அவர் கூறிவிட்டதாகவும் யூகிக்கப்படுகிறது.

'தாக்குதல் நடந்தால் தலையிட்டுக் கொள்ள வேண்டாம்,' என்று அமெரிக்கப் படையினருக்கு ஐசன்ஹோவர் உத்திரவிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

வீரர்களின் வாரிசுகள் !

"விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுமானால், 1857-ம் ஆண்டுப் புரட்சியில் கலந்துகொண்டு, அதனால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்குப் 'பென்ஷன்' அல்லது 'அலவன்ஸ்' அளிப்பது பற்றி கவனிக்கப்படும்," என்று டில்லி மேல் சபையில் அறிவிக்கப்பட்டது.

'சிப்பாய்க் கலக வீரர்'களின் வாரிசுகளுக்கு 'பென்ஷன்'களுக்கென மாதந்தோறும் செலவாகும் தொகை ரூ. 1,211—2—0.

செங்கற்பட்டு மாவட்ட கிராம அபிவிருத்தித் திட்டங்கள்

ஐந்தாண்டுத் திட்டக் குழுவின் முடிவுகள்

சென்னை, ஏப். 13—

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள கிராமங்களுக்கான விசேட அபிவிருத்தி திட்டத்தின் விவரங்கள் சைதாப்பேட்டை கலெக்டர் காரியாலயத்தில் நடைபெற்ற இரண்டாவது 5 ஆண்டுத் திட்ட கமிட்டி கூட்டத்தில் வகுக்கப்பட்டன.

கூட்ட ஆரம்பத்தில் அபிவிருத்தி கமிஷனர் பேசுகையில், அடுத்த 5 ஆண்டு திட்டத்தில் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு 10 கோடி ரூபாய் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுவதாயும், அத்தொகையில் கிராம வாரியாக, இரண்டு, மூன்று கோடி ரூ. செலவிடப்படலாமென்றும் கூறினார்.

அடியிற்கண்ட விவரங்கள் முடிவு செய்யப்பட்டன :—

சமுதாயநல திட்டங்களுக்கான மக்கள் நன்கொடை, சாதாரணமாக, செலவில் பாதியாயிருக்க வேண்டும் ; அதை ஏகருக்கு 3 சேர் தானியம் வீதம் அறுவடை காலத்தில் வசூலித்து, தொழிலாளருக்கு உணவளிக்க, கிராமாபிவிருத்தி கமிட்டி சேமிக்கலாம்.

ஒவ்வொரு கிராம 'யூனிட்'டும், சாதாரணமாக கர்ணத்தின் வட்டாரத்திலுள்ள கிராமங்களில் அடங்கியதாயிருக்கும். குறைந்த பட்சம் 1,000 மக்கள் தொகை கொண்டதாயிருக்க வேண்டும். மேஜர், மைனர் பஞ்சாயத்துகள் தனி 'யூனிட்'டுகளாகக் கருதப்படும்.

மக்கள் தொகையில் நபரொன்றுக்கு ரூ. 10 வீதம் செலவு செய்யும் அடிப்படையில் ஒவ்வொரு 'யூனிட்'டுக்கும் திட்டம் தயாரிக்கப்படும். கிடைக்கும் பணம், பொது அபிவிருத்திகளுக்கும், தனிப்பட்ட அபிவிருத்திகளுக்குமிடையே சமமாகப் பிரித்துச் செலவிடப்படும்.

கிராம அபிவிருத்தி கமிட்டிகள் 26—5—55-ந் தேதிக்குள் நிறுவப்படவேண்டும் ; அதில், வட்டார எம். எல். ஏ.-க்கள் உதவி புரிய அழைக்கப்பட வேண்டும்.

உதாரணமாக பொது வசதிகளுக்கு ரூ. 5,000 ஒதுக்கலாம். 500-க்கு மேற்பட்ட மக்கள் தொகையிருக்கும் 'யூனிட்'டுகளில், ஒரு மைல் தூரத்திற்குள் பள்ளிக்கூட மில்லாவிட்டால், பள்ளிகளை ஏற்படுத்த ரூ. 750 செலவிடலாம் ; புது கட்டிடத்துக்கு ரூ. 5,000 செலவிடலாம் ; இதில், ரூ. 750 கிராம பட்ஜட்டிலிருந்தும் ரூ 4,250 மாவட்ட ரிசர்விலிருந்தும் ஒதுக்கலாம்.

5 மைல் தூரத்திற்குள் மருத்துவ வசதியில்லாத கிராமங்களில் லாதபடி மருத்துவ மனைகள் வைக்கலாம். செலவை, பயன் பெறும் எல்லா கிராமங்களும் கொடுக்கவேண்டும். கூடியவரையில் அதிக மக்கள் தொகையுள்ள கிராமத்திலேயே மருத்துவ மனை வைக்கவேண்டும்.

கிராம மருத்துவசாலையுடன் பிரசவ விடுதி (ரூ. 500 செலவில்) ஏற்படுத்தப்பட வேண்டும்.

25,000 கால்நடைகளுக்கு ஒன்று வீதம் ரூ. 250 செலவில் கால் நடை ஆஸ்பத்திரிகள் வைக்கலாம்.

கிராமங்களுக்கு செல்லும் பாதைகளை மட்டும் அபிவிருத்தி செய்யவும், புதுப் பாதைகள் போடவும் ஒவ்வொரு கிராமமும் ரூ. 1,000 செலவிடலாம்.

புது பள்ளிகள் கட்டப்படாத கிராமங்களில் சமுதாய நிலையம் (ரூ. 750) செலவில் கட்டலாம் பள்ளியிருந்தால் அதுவே சமுதாய நிலையமாக (பள்ளிகளில்லாத நேரங்களில்) பயன்படுத்தப்பட வேண்டும்.

ரூ. 175 செலவில் குழந்தைகளுக்கான பூங்கா ஏற்படுத்தப்படலாம்.

கிராம சாலைகள் ரூ. 500 செலவில் தூசியற்ற பாதைகளாக்கலாம்.

நூல் நிலையம், ரேடியோவுக்கு ரூ. 325 செலவிடலாம்.

கிணறுகளுக்கு ரூ. 500 செலவிடலாம். அங்கீகரிக்கப்பட்ட வடிவில், புது வீடுகள் கட்டுபவர்களுக்கு ரூ. 150-க்கு அதிகப்படாமல் பண உதவி செய்ய ரூ. 2,000 ஒதுக்கலாம்.

விவசாயத்துக்குஆக்கமளிக்கவிவசாய இலாகா விநியோகம் செய்யும் விதைகளின் விலையில் 10 முதல் 25 சதவிகித தள்ளுபடி செய்ய ரூ. 750.

தரிசு நிலங்களை மீட்க ரூ. 250. (ஒரு ஏக்கருக்கு ரூ. 10 மானியம் தரலாம்).

கிராமக் காடுகளை வளர்க்க 500 மரங்கள் நாட்டப்படும்; ஒவ்வொரு மரத்துக்கும் ரூ. 1 தரலாம். ஆசிரியராயிருந்தால் ரூ. 1—8—0 தரலாம்.

குடிசைத் தொழில் அபிவிருத்திக்கு ரூ. 250 மானியம்.

கோழிகள் அபிவிருத்திக்கு ரூ 250 மானியம்.

இந்தியாவில், 1954-ம் ஆண்டில் மொத்தம் 22 இரயில்வே நிலையங்கள்புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன.

ஐந்தாண்டுத் திட்டம்: சில புள்ளி விவரம்

"1954 ஏப்ரல்—செப்டம்பரில், பிரதான அபிவிருத்தித் துறைகளின் ஐந்தாண்டுத் திட்டத்தின் முன்னேற்ற இலட்சிய அளவைப் பொறுத்த வரை, திருப்திகரமாகவே இருக்கிறது," என்று திட்டக் குழுவின் குறிப்பொன்று கூறுகிறது. அக்குறிப்பில் மேலும் காணப்படுவதாவது :—

1952-53ல், திட்டத்திற்காகச் செலவானதைக் காட்டிலும், 1953–54ல், அதிக செலவு ரூ. 70 கோடி ; ஆனால் 1953-54-ஐ காட்டிலும், 1954-55ல், திட்டச் செலவு அதிகரிப்பு ரூ. 200 கோடிக்கு அதிகமாகும்.

1953-54-க்கு ஒதுக்கப்பட்ட தொகைகளுள், நடப்பு ஆண்டிற்கு (1954-55) கீழ்க்கண்ட மாநிலங்களுக்கு அதிகரிக்கப்பட்ட தொகைகளின் விவரம் தரப்படுகிறது :—

பீகார் :	ரூ.	700	லட்சம்
பம்பாய் :	ரூ.	20	"
சென்னை :	ரூ.	200	"
ஒரிசா :	ரூ	38	"
பஞ்சாப் :	ரூ	320	"
உத்தரபிரதேசம்:	ரூ.	137	"
மேற்கு வங்கம் :	ரூ.	500	"
மைசூர் :	ரூ.	200	"
சவுராஷ்டிரம் :	ரூ.	90	"

சமுதாய அபிவிருத்தித் திட்டங்களுக்காக, 1954 டிசம்பர் திங்கள் வரை செலவழிக்கப்பட்ட தொகையில் மக்களின் பங்கு சுமார் 4·77 கோடி ரூபாயாகும்.

தண்டலச்சேரி மறுமலர்ச்சி மன்றம்

8—4—55ல், கவரப்பேட்டைக் கடுத்த தண்டலச்சேரி கிராமத்தில் தோழர் சி. கிருட்டிணன் தலைமையில் மறுமலர்ச்சி மன்றம் துவக்கப் பெற்று தோழர்கள் இ. எஸ் மணி தலைவராகவும், சின்னையா துணைத் தலைவராகவும், செல்லப்பன் செயலாளராகவும், ஏ. சாமிநாதன் துணைச் செயலாளராகவும், தண்டலை பாண்டியன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

• • •

10—4—55ல், தண்டலச்சேரியில், மறுமலர்ச்சி மன்றச் சார்பில் இராமானுயக்கன் கண்டிகையில் தோழர் டி. ஏழுமலை தலைமையில் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இ. பி. வத்சலன், சின்னையா, ஏ. சாமிநாதன், ஏ. இராதாமணாளன், ஈ. எஸ் மணி ஆகியோர் மறுமலர்ச்சியின் அவசியம் பற்றிப் பேசினர்.

வள்ளுவர் படிப்பகம் திறப்பு விழா

8—4—55 மாலை 5½ மணிக்கு திருவோணத்தில் வள்ளுவர் படிப்பகத்தை திரு. டி. தங்கசாமி அவர்கள் திறந்துவைத்து, தனது தலைமையுரையில், 'வள்ளுவரும் குறளும்' என்னும் பொருள்பற்றி பேசினார். பின்னர் தோழர்கள் ரசூல் பேக், காளியப்பன், சோமசுந்தரம் ஆகியோர் படிப்பகத்தின் அவசியம் குறித்துப் பேசினர்.

திருமணங்கள்

11—4—55 காலை 9½ மணியளவில், முத்துப் பேட்டையில், தோழர் ஆ. மீ. அலிசேக் மன்சூர் தலைமையில், தோழர் செல்லையன்—தோழியர் பாப்பா திருமணம் நடைபெற்றது தோழர்கள் பலர் 'திருமணம்' என்பது பற்றி பேசினார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

• • •

10—4—55 காலை 8 மணிக்கு புதுவையில் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் தோழர் கிருஷ்ணராஜ்—தோழியர் காகம்மை திருமணம் சீர்திருத்த முறையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர். மணமகனால் கழக வளர்ச்சிக்காக ரூ. 5 நன்கொடை அளிக்கப்பட்டது.

தலைமைக் கழகம் : அறிக்கை—8/55

தி. மு. கழக மாவட்டக் கிளைத் தேர்தல்

மாவட்டம்	தேர்தல் நாள்	நேரம்	இடம்	தேர்தல் ஆணையாளர்
சென்னை	17—4—55	காலை 9 மணி	'அறிவகம்', இராயபுரம், சென்னை—13	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
தென் ஆற்காடு	17—4—55	மாலை 3 மணி	அமராவதி பங்களா (தபால் நிலையத்துக்கு அருகில்) நெல்லிக்குப்பம்	எம். எஸ். இராமசாமி
சேலம்	17—4—55	காலை 10 மணி	'சாந்தி நிகேதன்', கோயமுத்தூர் லாட்ஜ், சேலம்	காஞ்சி-கல்யாணசுந்தரம்
கோவை	17—4—55	காலை 10 மணி	தி. மு. கழக அலுவலகம், கடைவீதி, ஈரோடு	மதுரை எஸ். முத்து
திருச்சி	17—4—55	காலை 10 மணி	'கருணாநிதி பார்க்', என். எஸ். பங்களா, திருச்சிராப்பள்ளி	என். எஸ். இளங்கோ
நாஞ்சில்	17—4—55	காலை 10 மணி	தி. மு. கழக அலுவலகம், வடசேரி, நாகர்கோயில்	சி. பி. சிற்றரசு

"அறிவகம்", சென்னை
4—4—'55

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க.

தேர்தலில் தோற்றாலும் மக்கள் ஆதரவு தங்களுக்குத்தானும்!

நாகி ரெட்டி கூற்று

"அண்மையில் நடைபெற்ற ஆந்திரத் தேர்தல் உண்மையிலேயே சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த ஒன்றுதான்; காங்கிரஸ் கட்சியுடன், மற்றும் சில கட்சிகள் ஒன்றுபட்டு ஐக்கிய முன்னணி அமைத்துக்கொண்டு, கம்யூனிஸ்டு கட்சியைத் தோற்கடிக்க வேண்டுமென்ற ஒரே நோக்குடன் வேலை செய்திருக்கின்றனர்; இதற்காக அவர்கள் தவறான — தீங்கிழைக்கக் கூடிய முறையில் பிரச்சாரம் செய்ததுடன், கம்யூனிஸ்டு கட்சியையும், கட்சியின் தலைவர்களையும் பற்றி மட்டரகமான முறையில் அவதூறு கிளப்பியிருக்கின்றனர்.

"தேர்தலின்போது, வாக்காளர்கள் தங்கள் சுய இஷ்டப்படி தங்கள் உரிமைகளை உபயோகிக்க அனுமதிக்கப்படவில்லை; எனினும், கம்யூனிஸ்டு கட்சியானது அரசியல் முறைப்படி பார்க்குமிடத்து தோல்வி கண்டதை ஒப்புக் கொண்டாலும், பொதுமக்களிடம் கம்யூனிஸ்டு கட்சிக்குக் கணிசமான அளவு ஆதரவும், செல்வாக்கும் இருந்து வருகிறது என்பது, தேர்தலில் கம்யூனிஸ்டு கட்சி பெற்றுள்ள மொத்த வாக்குகளின் எண்ணிக்கையே விளங்க வைக்கிறது"

இவ்வாறு, ஆந்திர கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் பி. நாகி ரெட்டி, குண்டூரில் நடைபெற்ற கூட்டமொன்றில், ஆந்திரத் தேர்தல் பற்றியும், கம்யூனிஸ்டு கட்சியின் நிலை பற்றியும் தம்முடைய கருத்தைத் தெரிவிக்கையில் கூறினார்.

மேலும் அவர் தொடர்ந்து கூறினார்:—

"காங்கிரஸ் கட்சி, தனது கொள்கைகளை—தேர்தல் கொள்கைகளை மக்கள் மத்தியில் கூறவோ, அல்லது தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் மக்களுக்குத் தாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்பது பற்றியோ எதுவும் கூறினது கிடையாது; அவர்களுடைய எண்ணமெல்லாம், கம்யூனிஸ்டு கட்சி ஆட்சிப் பொறுப்புக்கு வரக்கூடாது என்பதுதான்; அதனால்தான், அவர்கள், தங்கள் கொள்கைகளை மக்களுக்கு எடுத்துக் காட்டுவதற்கு மாறாக 'கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கம் ஏற்பட்டால் மக்கள் இருளில் தள்ளப்படுவார்கள்,' என்று கூறிக் கொண்டனர்: இது உண்மையிலேயே மிக மிக அபத்தமான ஒரு செய்கை; மக்களை படுகுழிக்குத் தள்ளும் காங்கிரசின் நடவடிக்கையே யாகும்."

கம்யூனிஸ்டுக் கட்சியினின்றும் சிலர் பிரிந்து 'தொழிலாளர் கட்சி' ஒன்று அமைக்கப்படப் போவதாக உலவும் செய்தியை அவர் மறுத்திருக்கிறார். 'கம்யூனிஸ்டு கட்சி என்றும்போல் தனது வேலைகளைச் செய்யும்,' என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர், 'விசால ஆந்திரக் கோரிக்கையைப் பொறுத்த மட்டில், கம்யூனிஸ்டு கட்சி தனது முழு அளவு சக்தியையும் உபயோகிக்கும்,' என்றார்.

கண்ணாடித் தொழிற்சாலையில் சத்தியாக்கிரகம்

அமைச்சரின் வாக்குறுதி

ஐதராபாத், ஏப். 13—

இங்குள்ள கண்ணாடித் தொழிற்சாலை ஒன்றில் சுமார் 400 தொழிலாளர்கள் 'உள்ளிருப்புச் சத்தியாக்கிரகம்' மேற்கொண்டுள்ளனராம்.

இவர்களில் சிலர், தொழிற்சாலை கட்டிடத்தின் உட்பகுதியிலும், மற்றும் சிலர், தொழிற்சாலைக்கு வெளியேயும் இருந்து வருகின்றனராம்.

தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதே இவர்களது சத்தியாக்கிரகத்திற்குக் காரணமாம்.

74 தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படவேண்டிய 1954-ம் ஆண்டு நவம்பர் திங்கள் ஊதியமும், கடந்த பிப்ரவரி, மார்ச் ஆகிய இரு திங்களிலும் ஆலையில் உள்ள எல்லா தொழிலாளருக்கும் தரப்படவேண்டிய ஊதியமும் கொடுக்கப்பட வேண்டுமென்பதும், தொழிற்சாலை மீண்டும் துவக்கப்பட வேண்டும் என்பதுமே அவர்களது கோரிக்கைகளாகும்.

மேற்படி ஆலைத் தொழிலாளர் சங்கத் தலைவர்கள் மாநில முதன் மந்திரியிடமும், தொழில் அமைச்சரிடமும் தங்கள் குறைகளை மகஜர் ஒன்றின் மூலம் எடுத்துக் கூறியிருக்கின்றனர். மகஜரைப் பெற்றுக் கொண்ட அமைச்சர்கள், தொழிலாளர் தம் கோரிக்கைகளைக் கவனிப்பதாகவும், இதனிடையில் அவர்களது சத்தியாக்கிரகத்தை நிறுத்தும்படி கேட்டுக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

எனினும் தொழிலாளர்கள் தொடர்ந்து சத்தியாக்கிரகத்தை நிறுத்தாமல் நடத்தி வருகின்றனர்.

★

சர்க்கரை தொழிற்சாலை முன்பு சத்தியாக்கிரகம்

இங்குள்ள நைசாம் சர்க்கரைத் தொழிற்சாலை முன்னர் ம. சோ. கட்சியைச் சேர்ந்த 'சத்தியாக்கிரகிகள்' சிலர் கைது செய்யப்பட்டனராம்.

மேற்படி ஆலை நிர்வாகம், 'எக்சலி' எனப்படும் ஒருவகை கரும்பினைப் பயிரிட அனுமதிக்கப்பட வேண்டுமென்று கோரி பி. சோ. கட்சியினர் ஆதிக்கத்தில் இருந்து வரும் மேற்படி சர்க்கரை தொழிற்சாலை தொழிலாளர்கள் ஒவ்வொரு பிரிவினராகப் பிரிந்து பிரிந்து சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டு வருகின்றனராம்.

இவர்களில் முதலாவது பிரிவினரைக் கைது செய்ய உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம்.

மனித வேட்டை!

நைரோபி, ஏப். 12—

கடந்த வாரத்தில் கென்யா பாதுகாப்பு போலீசார் 95 பயங்கரவாதிகளைக் கொலை செய்தனரென்றும், 34 பேர் கைப்பற்றப்பட்டுள்ளனர் என்றும், சந்தேகத்தின் மீது 77 பேர் சிறை வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

காரணம் என்னவோ?

போர்னியோவில் குடியேறுவதற்கு 10,000 விவசாயிகளை அனுப்புமாறு இந்தியாவுக்கு பிரிட்டிஷ் போர்னியோ சர்க்கார் அனுப்பியிருந்த அழைப்பை அவர்கள் திரும்பப் பெற்றுவிட்டனர்," என்று, டில்லி மேல்சபையில், பிரதமர் நேரு அறிவித்துள்ளார்.

கழகக் கூட்டம்

★

பொன்மலை

மேலக்கற்கண்டார்கோட்டை

கழக மைதானத்தில்

16—4—55 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

சிற்றுளி சுப்பிரமணியம்

அம்பில் தர்மலிங்கம்

வட நாட்டு அகதிகளுக்கு உதவி

இந்திய சர்க்காரின் தாராளம்!

இந்திய சர்க்கார் புனர்வாழ்விப்பு இலாகா, இவ்வாண்டு பிப்ரவரி திங்கள் இறுதிவரையிலும் இடம் பெயர்ந்த அகதிகளுக்கென மொத்தம் ரூ. 9,35,91,000 செலவிட்டுள்ளதாகத் தெரிகிறது.

இவ்வாண்டு மார்ச்சு திங்களில் மட்டும் ரூ. 7,59,000 மதிப்புடன், 118 அகதிகள் கடன் மனுக்களுக்கு அனுமதி தந்துள்ளது. இந்த 118 மனுக்களில், கல்கத்தாவிலிருந்து 78 மனுக்களும், கௌஹாத்தியிலிருந்து 39 மனுக்களும், புதுடில்லியிலிருந்து ஒன்றுமாக வந்துள்ளனவாம்.

'மனைவி இருக்கும் ஆணை படித்த பெண்கள் மணந்து கொள்வதா?'

'பெண் இனத்துக்கே செய்யும் மகத்தான துரோகம்'

பாக். பிரதமர் இரண்டாம் மணத்திற்குக் கண்டனம்

கராச்சி, ஏப். 13—

பாகிஸ்தான் பிரதமரான முகமது அலி, முதல் மனைவி இருக்க, தன்னிடம் செயலாளராகப் பணிபுரிந்து வந்த அலியா சாதியை இரண்டாம் தாரமாக மணந்துகொண்டார். இம்மணத்தை ஏற்கனவே எதிப்திய மாதர் சங்கம் வன்மையாகக் கண்டித்து இருக்கிறது.

இப்பொழுது கராச்சியிலுள்ள தொழில் துறையில் ஈடுபட்டுள்ள பெண்கள் கழகம், முகமது அலியின் போக்கைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது.

பாகிஸ்தானில், மனைவி இருக்க மறுமணஞ் செய்து கொள்ளும் வழக்கம் பெருகி வருவதைக் கண்டித்தும், இரண்டாம் மணத்திற்கு உடந்தையாக இருப்பதின் மூலம் தமது பெண்ணினத்துக்கே துரோகம் செய்யும் படித்த பெண்களை வன்மையாகக் கண்டித்தும், மேற்படி பெண்கள் கழகம் தீர்மானித்து இருக்கிறது.

கறுப்பர் குழந்தைகள் கல்வி கற்க தடை

தெ. ஆப்பிரிக்க சர்க்கார் கையாண்ட முறை எதிரொலி

ஜோகனஸ்பர்க், ஏப். 13—

தென் ஆப்பிரிக்க சர்க்கார், அண்மையில் நிறைவேற்றியிருந்த 'பாண்டு' கல்விச் சட்டத்தையொட்டி, விட்வாடர்ஸ்ராண்டிலுள்ள இரண்டு பள்ளிகளில், ஆப்பிரிக்க, மற்றும் கறுப்பர் குழந்தைகள் பள்ளிகளுக்குச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளதென செய்தி ஒன்று அறிவிக்கிறது.

தென் ஆப்பிரிக்க சர்க்கார், தனது சட்டத்தின் மூலம், மதக் கல்வி நிறுவனங்களிலும், மற்ற மாநில சர்க்கார் கல்வி நிறுவனங்களிலுமுள்ள ஆப்பிரிக்கர்களுக்கான கல்விக் கட்டுப்பாடுகள் அனைத்தையும் தனது கைக்கு மாற்றி மத்திய உள்நாட்டு விவகார இலாகாவிடம் ஒப்படைத்துள்ளது.

ஜோகனஸ்பர்கிற்கு 18 மைல் தொலைவிலுள்ள பினோனி எனும் இடத்திலுள்ள பள்ளிகளில் பயிலும் ஆப்பிரிக்கர், கறுப்பர் குழந்தைகள் அனைவரும் பள்ளிகளுக்கு வரவொட்டாமல், அலெக்சாண்டிரியா பகுதிகளில் தடுத்து நிறுத்தப்பட்டனர் என்று தெரியவருகிறது.

மே. வங்க-அசாம் தகராறு எதிரொலி

கலகக்காரர்கள் மீது போலீஸ் கடும் நடவடிக்கை

இராணுவத் துருப்புகளும் சோதனை செய்கிறதாம்!

கடந்த ஒன்றிரண்டு வாரகாலமாக அசாம் மாநில எல்லைக்கருகில் உள்ள கோல்பாரா மாவட்டத்தில், மேற்கு வங்க—அசாம் தகராறுகளை யொட்டி தற்போது கோல்பாரா மாவட்டத்தில் போலீசாருக்கு உதவியாக இராணுவத் துருப்புகள் அழைக்கப்பட்டுள்ளனவாம்.

தேவையான அளவு உதவிக்காக ஆயுதந்தரித்த போலீசார் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், மேலும் சில மாவட்டங்களிலிருந்து ஆயுதந்தாங்கிய போலீஸ் படையின் வருகை எதிர்பார்க்கப்படுவதாகவும் சர்க்கார் அறிக்கை ஒன்றில் காணப்படுகிறது.

அழைக்கப்பட்டுள்ள இராணுவத்துருப்புகள் தங்கள் முதல் நடவடிக்கையாக மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சோதனைகள் நடத்தி வருவதாகவும், இராணுவப் படை யூனிட் முழுவதுமே இந்த முயற்சியில் ஈடுபடும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது

தற்போது அங்குள்ள சூழ்நிலை சாதாரணமானதாகவே இருந்து வருகிறதாம்.

மாவட்டத்தின் உட்பகுதியில் உள்ள கலகக்காரர்கள் மீது போலீசார் கடும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்; சென்ற 8-ந் தேதியன்று பாங்கியன் கானில் 8 பேர் போலீசாரால் கைது செய்யப்பட்டனர்; சிட்லி, பீஜ்னி ஆகிய இடங்களிலுள்ள போலீஸ் எல்லைக்குள் அடங்கிய கிராமமொன்றில் 28 பேர் போலீஸ் காவலில் வைக்கப்பட்டனர்" என்றும் அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

'அதிகாரிகள் அனைவரும் நாட்டுப்புறப் பகுதிகளில் இத்தகராறுகளை யொட்டிய அலுவல்களில் ஈடுபட்டுள்ளதால் முக்கியமான நடவடிக்கைகள் பற்றிய முழு விபரமும் தெரியவில்லை" என்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

ம. பாரத் முதல் மந்திரியின் கட்டாய இராஜினாமா!

சட்டசபை காங்கிரஸ் கட்சியின் முடிவே காரணம்!

குவாலியர், ஏப். 13—

மத்திய பாரத் காங்கிரஸ் முதன் மந்திரியான மிசிரிலால் கங்குலால், தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டார். இராஜப்பிரமுகரின் வேண்டுகோளுக்கிணங்க, புதியவர் பதவி ஏற்றுக்கொள்ளும் வரையில், தாம் தொடர்ந்து பதவியிலிருந்து வர கங்குலால் ஒப்பியுள்ளார்.

தாக்கட்மல் ஜெயின் என்பவரை, சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்கள் ஒருமனதாகத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டதே கங்குவாலின் இராஜினாமாவிற்குக் காரணமாகும்.

மந்திரி சபைக்கு ஓராண்டு நிறைவு

சென்னை கவர்னர் விருந்து

சென்னை, ஏப். 13—

காமராசர் மந்திரி சபை பதவியேற்ற மூதலாண்டு விழா நிறைவைக் குறிக்க, கவர்னர் பிரகாசா காமராசருக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் இன்று ஓர் விருந்தளித்தார். பின்னர் அவர், மாநிலத்தில் தற்பொழுது நிலவிவரும் நிலைமை பற்றி அமைச்சர்களுடன் விவாதித்ததாகத் தெரிகிறது.

'மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டது!'

காங்கிரஸ் மந்திரி சபைமீது நம்பிக்கையில்லாப் பிரரேபணை

பீகார் சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவர் எஸ். கே. பேஜ் என்பவர், மாநில மந்திரி சபையின் மீது நம்பிக்கையில்லாப் பிரரேபணையைக் கொண்டுவந்து பேசுகையில், 'மக்களின் நம்பிக்கையை காங்கிரஸ் இழந்துவிட்டது,' என்று குறிப்பிட்டார்.

'சீனவிடத்தில் ரஷ்யாவிற்கு அச்சம்'

தொழிற்கட்சித் தலைவர் அட்லி அறிவிப்பு!

போர்ட்வில்லியம், ஏப். 13—

"இரஷ்யாவிற்கும் சீனவிற்கும் உள்ள நட்புறவு 'அன்பாலும் பாசத்தாலும்' ஏற்பட்ட ஒன்றாக நான் கருதவில்லை; சீனவைக் கண்டு இரஷ்யா அஞ்சுவதினாலேயே நட்பு இருக்கிறது என நான் நினைக்கிறேன்."

—இவ்வாறு, சோஷலிசக் கட்சியின் அழைப்பிற்கிணங்க பல சொற்பொழிவாற்ற கனடா சென்றுள்ள பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் அட்லி, ஒரு கூட்டத்தில் பேசும்பொழுது அறிவித்துள்ளார்.

தனது முதல் சொற்பொழிவில், உடன் இருத்தலைத்தான் உலகம் விழைவதாகவும், சீனவிலுள்ள தற்கால அரசாங்கத்திற்குச் சீன மக்களின் பேராதரவு இருக்கிறது என்பதை உலகம் ஒப்புக்கொள்ள வேண்டும் எனவும் அட்லி குறிப்பிட்டார்.

சதிவழக்குக் கைதிகள் ஜாமீனில் விடுதலை

1952-ல், ராவல்பிண்டி சதி வழக்கில், பாகிஸ்தான் சர்க்காரைக் கவிழ்த்து, இராணுவ ஆதிக்கத்தின்கீழ் கம்யூனிஸ்டு ஆட்சியை நிலைநிறுத்த சதி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்ட எழு இராணுவ அதிகாரிகளும், ஒரு பத்திரிகாசிரியரும் லாகூர் உயர்நீதிமன்ற உத்திரவின் மூலம் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ளனராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.